**சிஷ்யா பள்ளி-ஓசூர்– 2022-23**

**நுழைவுத் தேர்வு வினாத்தாள்-1**

**பாடம் – தமிழ்.** **மதிப்பெண் -25**

**வகுப்பு : 7-8** **காலம் – 50 நிமிடங்கள்**

**பிரிவு - அ (படித்தல்/பொதுப்பத்தி)**

**I. பின்வரும் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **5x1=5**

வள்ளலார் இறைவன் ஒருவனே அவன் ஒளிவடிவானவன் என்பதையும், அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப்பெருங் கருணையே கருவி என்பதையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார். சாதி, மத, சமய, இன வேறுபாடு கூடாது; எவ்வுயிரையும் கொல்லலாகாது; புலால் புசித்தல் கூடாது; எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணுதல் வேண்டும்; ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்; உலக மக்கள் அனைவரையும் உடன்பிறந்த பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

**வினாக்கள்:**

1. இறைவனை அடைவதற்கான கருவி எது?

அ) பக்தி ஆ) தனிப்பெருங்கருணை

இ) பக்திப்பாடல் பாடுவது ஈ) உண்மையான வழி

2. எல்லா உயிர்களையும் எவ்வாறு எண்ணுதல் வேண்டும்?

அ) தம் உயிர்போல் ஆ) பிற உயிர்போல்

இ) ஓரறிவு உயிர்போல் ஈ) ஆறறிவு உயிர்போல்

3. உலக மக்களை எவ்வாறு நேசித்தல் வேண்டும்?

அ) தாயாய் ஆ) தந்தையாய் இ) நண்பனாய் ஈ) உடன் பிறப்புகளாய்

4. சமரச சன்மார்க்க சங்கம் எங்கு உள்ளது?

அ) வயலூரில் ஆ) வேலூரில் இ) வண்டியூரில் ஈ) வடலூரில்

5. மக்களிடையே எவ்வகையான வேறுபாடுகள் இருத்தல் கூடாது?

அ) நிறம், இனம், உயரம்

ஆ) சாதி, சமயம், நிறம்

இ) சாதி, சமயம், இனம்

ஈ) உருவம், நிறம், பணம்

## பிரிவு - ஆ (இலக்கணம்)

**II. பின்வரும் இலக்கணப் பகுதியில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை எழுதுக.** **5x1=5**

1.குறில் எழுத்துகளைக் குறிக்க ............. என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

அ) கரம்

ஆ) கான்

இ) கேனம்

ஈ) கோடை

2.நெடில் எழுத்துகளைக் குறிக்க ........... என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

அ) கேனம்

ஆ) கரம்

இ) கான்

ஈ) கோடை

3.குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ............. வகையாகப் பிரிக்கப்படும்.

அ) 3

ஆ) 5

இ) 6

ஈ) 1

4.தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் .............

அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர் குற்றியலுகரம்

ஈ) மென்தொடர்க் குற்றியலுகரம்

5.ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும் குற்றியலுகரம் எது?

அ) மென்தொடர்க் குற்றியலுகரம்

ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர் குற்றியலுகரம்

ஈ) உயிர்தொடர்க் குற்றியலுகரம்

6.தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ................

அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

ஆ) வன்தொடர்க் குற்றியலுகரம்

இ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

ஈ) இடைத்தொடர் குற்றியலுகரம்

7.தன் ஒரு மாத்திரை அளவில் இருந்து குறுகி ஒலிக்கும் இகரம் ............. எனப்படும்.

அ) குற்றியலுகரம்

ஆ) குற்றியலிகரம்

இ) முற்றியலுகரம்

ஈ) ஐகாரக்குறுக்கம்

**பிரிவு - இ (எழுதுதல்)**

**III. பின்வரும் கடிதங்களில் ஏதேனும் ஒன்று மட்டும் எழுதவும். 1x5=5**

1. மிதிவண்டி ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி உன் தோழன் தோழிக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

2. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.
   - **இரண்டு கடிதங்களுக்கும் உனது முகவரி:**
     **தமிழ்ச்செல்வன்/தமிழ்ச்செல்வி, கம்பர் தெரு. மதுரை - 654321**

**IV. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு ஏதேனும் ஒரு கட்டுரை எழுதுக. 1x5=5**

1. முன்னுரை – மழையின் தேவை – மழையின் சிறப்புகள் – காடுகளின் அவசியம் – நாம் செய்ய வேண்டுவன – முடிவுரை.

**(அல்லது)**

2. முன்னுரை – கல்வி கண் போன்றது – கல்வியின் சிறப்பு – காலமும் கல்வியும் – இளமைப்பருவமும் பயிலும் தன்மையும் – இளமையில் கல்

– முடிவுரை.

**பிரிவு- ஈ (படித்தல்)**

**V. வாசித்தல் திறன். (5)**

பழந்தமிழர் அன்பு வழியினர், அறத்துக்கே அன்பு சார்பு என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தினையும் ஏற்றிப் போற்றினர். களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்னும் புறப்பாடல் வீரத்தினை முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர் பெண்களின் பெருவீரத்தினைப் பாடுகிறார். முதல்நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள், இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள், மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள் பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே அவள் துணிவு!.